ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1915/19 - 2015 මැයි මස 20 වැනි බදාදා - 2015.05.20
1915 / 19 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபை

**2015 ஆம் ஆண்டின்......... இலக்க மத்திய மாகாணத்தின் மாகாண சபையின்
முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நியதிச் சட்ட வரைவு**

மத்திய மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, மாகாண நிர்வாக, மனித வலு, கல்வி மற்றும் கலாசார அலுவல்கள், சுற்றுலா, காணி, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகமும் வாணிபமும், உணவு விநியோகம் மற்றும் பகிர்ந்தளிப்பு நடவடிக்கைகள் மற்றும் முதலீடு தொடர்பிணைப்பு சம்பந்தமான விடயப் பொறுப்பு அமைச்சருமான சரத் ஏக்கநாயக்க ஆகிய நான், இங்கு வெளியிடப்படும் மத்திய மாகாணத்தின் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நியதிச் சட்ட வரைவு இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து இரண்டு வாரங்களின் பின்னர் மத்திய மாகாணத்தின் மாகாண சபையில் முன்வைக்கப்படும் என்பதை இத்தால் அறிவித்துக்கொள்கிறேன். இந்த நியதிச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்பில் ஏதும் அம்சங்கள் அல்லது திருத்தங்கள் இருப்பின், குறித்த அம்சங்களையும் அல்லது திருத்தங்களையும் எவரேனும் உரிய காலத்துக்குள் செயலாளர், பிரதான மற்றும் கல்வி அமைச்சருக்கு முன்வைக்க முடியும்.

சரத் ஏக்கநாயக்க,
மத்திய மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல்,
சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, மாகாண நிர்வாக, மனித வலு, கல்வி
மற்றும் கலாசார அலுவல்கள், சுற்றுலா, காணி, கூட்டுறவு அபிவிருத்தி,
வர்த்தகமும் வாணிபமும் உணவு விநியோகம் மற்றும் பகிர்ந்தளிப்பு
நடவடிக்கைகள் மற்றும் முதலீடு தொடர்பிணைப்பு சம்பந்தமான விடயப்
பொறுப்பு அமைச்சரும்.

முதலமைச்சு அலுவலகம்,
மத்திய மாகாண மாகாண சபை,
பள்ளேகல,
2015, மே 13.



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**மத்திய மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின் ....... இலக்க, முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நியதிச்சட்டம்**

*மத்திய மாகாணத்தில் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி பிரிவொன்றை நிறுவுவதற்காகவும் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி மத்திய நிலையங்களை பதிவு செய்தல், கண்காணிப்பு செய்தல், நிர்வாகம் செய்தல் மற்றும் நடாத்திச் செல்லல் என்பவற்றுக்கும் அது தொடர்பான அல்லது அதற்கு சமமான விடயங்களுக்கான ஏற்பாடுகள் செய்வதற்கும் மத்திய மாகாண சபையில் 1990 ஆண்டின் 3 ஆம் இலக்க, கல்வி நியதிச் சட்டம் II ஆவது பிரிவின் 12 (2) (xii) ஆவது உப பிரிவை தளர்த்துவதற்கான ஏற்பாடுகள் செய்வதற்கான நியதிச் சட்டமாகும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண சபையால் இவ்வாறு விதந்துரைக்கப்படுகின்றனது :-*

*ஆவணத்தின் பெயர் மற்றும் நடைமுறையாகும் தினம்.*

*1. இந்நியதிச்சட்டம் 2015 ஆம் ஆண்டின் ... ஆம் இலக்க, மத்திய மாகாண முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நியதிச் சட்டம் என அழைக்கப்படுவதுடன் மத்திய மாகாண ஆளுநர் அவர்கள் அங்கீகாரம் வழங்கும் தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும்.*

*2. 1990 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, கல்வி நியதிச் சட்டம் 12 (2) (xii) உப பிரிவுகள் இதன் மூலம் தளர்த்தப்படுவதுடன் அதற்குப் பதிலாக இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மாற்றப்படும்.*

I ஆவது பகுதி

**முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி பிரிவு ஒன்றை நிறுவுதல்**

*முன் பிள்ளைப் பருவம்.*

*3. பிள்ளை ஒன்றின் முன் பருவ அபிவிருத்தி எனக் கருதப்படுவது, பிறந்தது முதல் முறையான பாடசாலை கல்விக்கு உள்வாங்கப்படும் வரையான காலப்பகுதியாகும்.*

*மத்திய மாகாண முன் பிள்ளை அபிவிருத்தி பிரிவை நிறுவுதல்.*

*4. இந் நியதிச் சட்டத்திற்குள் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ள நோக்கங்களை நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளுக்காக மத்திய மாகாண முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு என அழைக்கப்படும் (இதன் பின்பு "பிரிவு" என குறிப்பிடப்படும்) பிரிவொன்று மத்திய மாகாண பிரதான அமைச்சின் கீழ் நிறுவப்படும்.*

*பிரிவுக்காக பணிப் பாளர் ஒருவரை நியமித்தல்.*

*5. இதன் பின்னர் "பணிப்பாளர்" என அழைக்கப்படும் ஒருவர் மத்திய மாகாண கௌரவ பிரதான அமைச்சரின் சிபார்சின் அடிப்படையில் மத்திய மாகாண கௌரவ ஆளுநரினால் நியமனம் செய்யப்படும் அதேவேளை அவரே இப்பிரிவின் தலைவராக செயற்பட வேண்டும். இப் பிரிவிற்கு நியமனம் செய்யப்படும் பணிப்பாளர் மத்திய மாகாணத்திற்குள் சேவையாற்றும் பதவிநிலை சேவை உத்தியோகத்தர் ஒருவராக இருக்க வேண்டும்.*

*பணிப்பாளரின் பொறுப்பும் கட்டுப்பாடும்.*

*6 (1) இந்த நியதிச் சட்டத்தின் நோக்கங்களை அடையப் பெற்றுத்தருவது பணிப்பாளரின் பொறுப்பாக அமைவதோடு முகாமைத்துவ சபையின் மேற்பார்வை மற்றும் நிர்வாகத்தின் கீழ் பணிப்பாளர் செயற்பட வேண்டும்.*

*பணிப்பாளரின் பதவிக் காலம்.*

*(2) இறப்பு, இராஜினாமா, பதவியில் இருந்து நீக்குதல் அல்லது முன்னைய பதவியை கைவிட்டாலோ தவிர நியமனத் திகதியில் இருந்து 3 வருடங்கள் பணிப்பாளருக்கு பதவி வகிக்கலாம்.*

*பணிப்பாளர் பதவிக்கு மீள நியமித்தல்.*

*(3) (2) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவராக இல்லாவிடில் பணிப்பாளர் மீண்டும் நியமனம் பெற தகுதியானவராகலாம்.*

*பணிப்பாளர் பதவி வெற்றிடமாகுதல்.*

*(4) பணிப்பாளர் பதவியில் ஏதும் வெற்றிடம் தோன்றுமாயின் புதிய பணிப்பாளர் தெரிவு செய்யப்பட வேண்டிய அதேவேளை அவ்வாறு நியமனம் வழங்கப்படும் வரை அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் பெயரிடப்படும் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் அப்பதவியின் செயற்பாடுகளை நடாத்திச் செல்வதற்காக நியமிக்கப்படலாம்.*

7. பிரிவின் நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஊழியர்களை மத்திய மாகாண அரச சேவையிலிருந்து நியமனம் செய்யலாம். பிரிவுக்கு ஊழியர்களை நியமித்தல்.

8. பிரிவின் நோக்கங்கள் பின்வருமாறு :- பிரிவின் நோக்கம்.

(1) மாகாணத்தில் முன் பிள்ளைப் பருவ கல்வியை மேம்படுத்தல்.
(2) முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி மத்திய நிலையங்களை பதிவு செய்தல், முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை செய்தல்.
(3) முன் பிள்ளைப் பருவத்தில் உள்ள சிறுவர்களின் உடல் மற்றும் உள ரீதியான விருத்திக்கு அவசியமான சூழலை உருவாக்குதல்.
(4) முன் பிள்ளைப் பருவத்தில் உள்ள சிறுவர்களின் உரிமைகளை பாதுகாத்து முறையான பாதுகாப்பை வழங்குதல்.
(5) முன் பிள்ளைப் பருவத்தை அபிவிருத்தி செய்யத் தேவை என உணரப்படும் வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

9. பிரிவின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் கீழ் வருமாறு:- பிரிவின் பணிகள் மற்றும் அதிகாரங்கள்.

(1) முன் பிள்ளைப் பருவம் தொடர்பாக மத்திய மாகாணத்தில் தொழிற்படும் அனைத்து நிறுவனங்களையும் பதிவு செய்தல், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்,

(2) முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னேற்றத் தேவையான வழி காட்டல்கள் மற்றும் உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்,

(3) மத்திய நிலைய ஆலோசகர்களுக்கு குறைந்தபட்ச தகுதிகளை நிர்ணயம் செய்தல்,

(4) மத்திய நிலையங்களில் ஆலோசகர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல்,

(5) மத்திய நிலையங்களில் ஆலோசகர்களை பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்திக்காக பயிற்சி நிறுவனங்களை நடாத்திச் செல்லல் மற்றும் தொழில் திறன்களின் அடிப்படையில் மதிப்பீடுகள் செய்து சான்றிதழ்கள் வழங்குதல்.

(6) முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி மத்திய நிலையங்களின் தற்போதைய சேவை வசதிகள் மற்றும் ஊழியர்களை கணிப்பீடு ஒன்றுக்கு உற்படுத்தி மதிப்பீடுகள் வழங்கல்,

(7) மத்திய நிலையங்களின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக குறைந்தபட்ச நியமங்களை நிர்ணயித்தல்,

(8) முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தியின் முக்கியத்துவம் தொடர்பாக பிரஜைகளுக்கு தெளிவுபடுத்தல்,

(9) மாகாணத்திற்குள் நடாத்திச் செல்லப்படும் எந்தவொரு முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையமும் இந்நியதிச் சட்ட ஏற்பாடுகளுக்கு இணக்கமற்று இருக்குமானால் அம் மத்திய நிலையத்தை தற்காலிகமாக இடைநீக்கம் செய்தல் அல்லது நிறுத்துதல்,

(10) பிரிவினால் வழங்கப்படும் சேவைகளுக்காக கட்டணம் அல்லது பணம் அறவிடல்,

(11) மத்திய நிலையமொன்றினால் நடாத்திச் செல்ல வேண்டும் என நிர்ணயம் செய்யப்படும் புத்தகங்கள், எழுத்து ஆவணங்கள் மற்றும் மாதிரி படிவங்களை அறிமுகப்படுத்தலும் அவற்றை பயன்படுத்த வழிவகைகளை செய்தலும்,

(12) முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தியுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வெளி நபர்களுடன் உடன்படிக்கைகளுக்கு வருதல் மற்றும் தொடர்புகளை பேணுதல்,

(13) விசேட தேவையுடைய குழந்தைகள், அவர்களின் பெற்றோர் மற்றும் பிரஜைகளுக்காக பொருத்தமான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

(14) மத்திய நிலையங்களுக்கு உள்வாங்கல் மற்றும் அவை முறையான தரத்துடன் நடாத்திச் செல்லப்படுகிறதா என பரீட்சித்தல்.

(15) மத்திய மாகாணத்திற்குள் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கு அவசியப்படும் வேறு செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்.

## II ஆவது பகுதி

## முகாமைத்துவ மற்றும் ஆலோசனைக் குழுக்களை நியமித்தல்

முகாமைத்துவ மற்றும் ஆலோசனைக் குழுக்கள்.

10. இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக (இங்கு இதன் பின்னர் “குழு” என அழைக்கப்படும்) முகாமைத்துவக் குழு ஒன்றும் ஆலோசனைக் குழு ஒன்றும் நிறுவப்பட வேண்டும்.

முகாமைத்துவக் குழு.

11. பிரிவின் பணிகளை வழி நடத்த மற்றும் மேற்பார்வை செய்ய பதினொரு நபர்கள் உள்ளடங்கிய “முகாமைத்துவக் குழு” என அழைக்கப்படும் குழு ஒன்று மாகாண பிரதான செயலாளரினால் நியமிக்கப்படும்.

முகாமைத்துவக் குழு அங்கத்துவம்.

12. முகாமைத்துவக் குழு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும் :-

(1) மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் ;
(2) மாகாண கல்வி அமைச்சின் செயலளார் ;
(3) மாகாண கல்விப் பணிப்பாளர் ;
(4) உள்ளூராட்சி ஆணையாளர் ;
(5) மாகாண நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு ஆணையாளர் ;
(6) மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்
(7) பிரதி பொலிஸ் மா அதிபர் அல்லது அவரினால் பெயரிடப்படும் பிரதிநிதியொருவர் ;
(8) பெருந்தோட்ட மனித அபிவிருத்திக்குப் பொறுப்பான பணிப்பாளர் அல்லது அவரினால் பெயரிடப்படும் பிரதிநிதி ;
(9) முன் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் ;
(10) பிரதான அமைச்சரினால் துறையுடன் தொடர்புடையதாக பெயரிடப்படும் அங்கத்தவர்.

முகாமைத்துவக் குழுத் தலைவர் மற்றும் செயலாளர்.

13. பிரதான அமைச்சின் செயலாளர் அதிகாரபூர்வ முகாமைத்துவக் குழுத் தலைவராவதுடன் பிரிவின் பணிப்பாளர் முகாமைத்துவக் குழுவின் செயலாளராக செயற்பட வேண்டும்.

முகாமைத்துவக் குழுவின் பணிகள் மற்றும் அதிகாரங்கள்.

14. முகாமைத்துவக் குழுவால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் மற்றும் அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் :-

(1) இந்த நியதிச் சட்டத்துக்கு இணைந்ததாக கொள்கை விளக்கமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்துக்காக பிரதான அமைச்சருக்கு முன் வைத்தல் ;
(2) இந் நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் மற்றும் கொள்கை விளக்கமொன்று நடைமுறைப்படுத்துவற்கு அவசியமான விதிமுறைகள் மற்றும் சுற்று நிருபங்களை விதிப்பின் போதும் அவை நடைமுறைப்படுத்தும் போதும் அவசியமான ஆலோசனைகள் வழங்கல் ;
(3) முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி விடயம் தொடர்பில் அரச மற்றும் அரச சார்பற்ற தரப்பினருக்கு மாகாணத்திற்குள் செயற்படுவதற்கு அவசியமான ஆலோசனைகள் மற்றும் அனுமதியை வழங்கல் ;
(4) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு பிரிவுக்கு அவசியமான அறிவுறுத்தல்களை வழங்குதல் ;
(5) பிரிவின் பணிகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக்கு அவசியமான ஏனைய அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களை வழங்கல் .

15. முகாமைத்துவக் குழுக்கூட்டத்தில் குறைந்தபட்ச எண்ணிக்கை ஐந்து ஆவதுடன் வருகை தந்திருக்கும் அங்கத்தவர்களின் பெரும்பான்மை விருப்பின் பெயரில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அங்கத்தவரின் விருப்புகள் சம நிலையில் காணப்படும் சந்தர்ப்பங்களில் குழுத் தலைவருக்கு நடுவர் வாக்கு ஒன்று வழங்கப்படல் வேண்டும். முகாமைத்துவக் குழுவின் தீர்மானங்கள்.

16. முகாமைத்துவக் குழுவின் பணிகளை நடாத்திச் செல்வதற்கு அவசியமான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்குவதற்காக பதினைந்து பேரை உள்ளடக்கிய "ஆலோசகர் குழு" எனப்படும் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும். ஆலோசகர் குழு.

17. (1) ஆலோசகர் குழுவின் உத்தியோகபூர்வ அதிகாரங்கள் அங்கத்தவர்கள் பன்னிரெண்டு பேருடன் மற்றும் பிரதான அமைச்சரினால் பெயரிடப்படும் முகாமைத்துவ குழு அங்கத்தவர் தவிர்ந்த அங்கத்தவர்கள் மூவரை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். ஆலோசகர் குழு அங்கத்தவர்கள் நியமனம் பிரதான அமைச்சரினால் மேற்கொள்ளப்படும். ஆலோசகர் குழுவின் அங்கத்துவம்.

(2) ஆலோசகர் சபையின் உத்தியோகபூர்வ அதிகாரத்தால் தெரிவாகும் அங்கத்தவர்கள் கீழ்வருமாறு:-

(அ) மத்திய மாகாண பிரதான செயலாளர் ;

(ஆ) மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் ;

(இ) மாகாண கல்வி அமைச்சின் செயலளார் ;

(ஈ) மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ;

(உ) மத்திய மாகாணத்திற்குள் இருக்கும் மாவட்டச் செயலாளர்களுள் ஒருவர் ;

(ஊ) பிரதிப் பிரதான செயலாளர் (நிதி) ;

(எ) மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ;

(ஏ) மாகாண கல்விப் பணிப்பாளர் ;

(ஐ) தேசிய பிள்ளைகள் செயலாளர் காரியாலயத்தின் பணிப்பாளர் அல்லது அவரால் பெயரிடப்படும் பிரதிநிதி ஒருவர் ;

(ஒ) பேராதெனிய பல்கலைக்கழக உப பீடாதிபதியினால் பெயரிடப்படும் நிரந்தர ஊழியர்களின் பிரதிநிதி ஒருவர் ;

(ஓ) பெருந்தோட்ட மனித அபிவிருத்திக்குப் பொறுப்பான பணிப்பாளர் அல்லது அவரினால் பெயரிடப்படும் பிரதிநிதி ;

(ஔ) மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆரம்பக் கல்வி விடயப் பொறுப்பான பணிப்பாளர்.

(3) ஆலோசகர் சபைக்கு அமைச்சரினால் பெயரிடப்படும் அங்கத்தவர்கள் கீழ் வருமாறு அமைய வேண்டும் :-

(அ) முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பாக சிறந்த அறிவு கொண்ட ஒரு பிரதிநிதி ;

(ஆ) மத்திய மாகாணத்திற்குள் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி தொடர்பான பணிகளில் ஈடுபட்ட ஒரு பிரதிநிதி ;

(இ) மத்திய மாகாணத்திற்குள் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி விடயம் தொடர்பாக இயங்கும் அரச சார்பற்ற நிறுவனமொன்றின் பிரதிநிதி.

*ஆலோசனைக் குழுவின் தலைவர் மற்றும் செயலாளர்.*

18. மாகாண பிரதான செயலாளர் ஆலோசனைக் குழுவின் தலைவராவதுடன் பிரதான அமைச்சின் செயலாளர் ஆலோசனைக் குழுவின் செயலாளராக செயற்படுவார்.

*ஆலோசகர் குழுவின் அதிகாரக் காலம்.*

19. ஆலோசனைக் குழுவின் அதிகாரக் காலம் 3 வருடங்களாகும்.

*ஆலோசனைக் குழுவை நடாத்திச் செல்லல்.*

20. நியதிச் சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாக ஆலோசனைக் குழுவை நடாத்திச் செல்வதற்காக தேவைப்படும் விடயங்கள் தொடர்பாக செயன்முறைகள் ஆலோசனைக் குழுவினால் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

*ஆலோசனைக் குழுவின் பணிகள் மற்றும் செயற்பாடுகள்.*

21. இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான ஆலோசனைச் சேவையை முகாமைத்துவக் குழுவுக்கு வழங்குவது ஆலோசகர் குழுவின் கடமைப் பாங்காகும்.

*குழுக்களின் அங்கத்தவர் பதவிக் காலம்.*

22. குழுவில் பெயரிடப்பட்ட அங்கத்தவர் ஒருவர் இறப்பு, இராஜினாமா, பதிவியில் இருந்து நீக்குவது அல்லது முன்னைய பதவியை கைவிட்டாலோ தவிர மூன்று வருடங்கள் பதவி வகிக்க வேண்டும்.

*குழுக்களில் அங்கத்தவர் பதவியை இழத்தல்.*

23. குழுவுக்கு பெயரிடப்பட்ட அங்கத்தவர் ஒருவர் ஏற்றுக்கொள்ள முடியுமான காரணமில்லாமல் தெரியப்படுத்தாமல் குழுவின் மூன்று கூட்டத்திற்கு தொடர்ச்சியாக சமுகமளிக்காவிட்டால் அவ் அங்கத்தவர் பதவியை விட்டுச் சென்ற ஒருவராக கருதப்பட வேண்டிய அதேவேளை குழுவின் செயலாளர் அது தொடர்பாக பிரதான அமைச்சருக்கு அறிவித்த பின்னர் அதற்குப் பொருத்தமான பதில் உத்தியோகத்தர் பிரதான அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டும்.

*குழுக்களில் அங்கத்துவர் பதவியிலிருந்து நீக்கப்படல்.*

24. குழுவில் பெயரிடப்பட்ட அங்கத்தவர் ஒருவர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பிரதான அமைச்சரினால் எழுத்து மூலமாக தெரியப்படுத்தியப் பின்னர் குழு அங்கத்துவத்திலிருந்து நீக்கலாம்.

*குழுக்களில் அங்கத்துவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்தல்.*

25. குழுவில் பெயரிடப்பட்ட அங்கத்தவர் ஒருவர் தமது பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக பிரதான அமைச்சருக்கு எழுத்து மூலமாக அறிவிக்க முடியுமான அதேவேளை அவ் இராஜினாமா பிரதான அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் அமுலாகும்.

*குழுக்களில் அங்கத்துவர் பதவி வெற்றிடமாகுதல்.*

26. குழுவின் அங்கத்தவர் ஒருவர் இறத்தல், இராஜினாமா செய்தல், பதவியிலிருந்து நீக்கல் அல்லது வேறு வழிகளில் பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பங்களில் பிரதான அமைச்சரினால் 12 மற்றும் 17 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கருத்திற் கொள்ளப்பட்டு அந்த அங்கத்தவரின் பதில் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்ய வேண்டும். அவ்வாறு நியமனம் செய்யப்படும் நபர் யாருடைய பதில் உத்தியோகத்தர் ஆவாரோ அவரின் காலத்தில் இல்லாமல் எஞ்சியுள்ள காலத்திற்கு பதவி வகிக்க வேண்டும்.

*குழுக்களில் அங்கத்துவர் பதவிக்காக மீள நியமித்தல்.*

27. குழுவின் அங்கத்தவராக ஒரு முறை பெயரிடப்பட்டவர் மீண்டும் ஒரு முறை குழுவின் அங்கத்தவராக பெயரிடப்படலாம்.

28. குழுவொன்று 3 மாதத்திற்கு ஒரு முறையாவது கூட வேண்டும்.

*குழுக்களில் அங்கத்துவர் பதவிக்கு தகுதியற்றவராகுதல்.*

29. ஒரு நபர்,

(1) இலங்கைப் பிரஜையாக இல்லாவிடின் அல்லது பிரஜா உரிமை நிறுத்தப்படுமானால்.

(2) இலங்கையிலோ அல்லது வெளிநாடு ஒன்றிலோ அமுலாகும் சட்டத்தின் கீழ் மனநிலை பாதிப்பு அல்லது வங்குரோத்து நிலைமையை அடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தால்; அல்லது.

(3) இலங்கையிலோ அல்லது வெளிநாடு ஒன்றிலோ நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் சிறைத் தண்டனை அனுபவித்தவராகவோ அல்லது அனுபவித்து இருப்பவராகவோ; அல்லது.

(4) குழுவின் அங்கத்தவராக அவரினால் பணிகள் நிறைவேற்றப்படும்போது பாதகம் விளைவிக்கும் தாக்கங்களுக்கு வாய்ப்பளிக்கும் பண ரீதியான அல்லது வேறு தொடர்பு ஒன்று இருப்பதாக பிரதான அமைச்சரின் கருத்தாக இருந்தாலோ; அல்லது.

(5) இந்த நியதிச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்துக்கு குற்றவாளியாக்கப்பட்டால்,

குழுவின் அங்கத்தவராக நியமிக்கப்படவோ அல்லது செயற்படுவதற்கோ தகுதியற்றவராவார்.

30. குழுவின் ஏதும் ஒரு நடவடிக்கை, தீர்மானம் அல்லது சட்டப் பணிகள் குழுவின் வெற்றிடம் அல்லது அதன் அங்கத்துவர் ஒருவரின் நியமனத்தில் உள்ள குறைப்பாட்டின் காரணமாக செல்லுபடியற்றதாக கருதுதல் கூடாது. குழுவின் செயற்பாடு ஒன்று செல்லுபடியற்றதாக மாறுதல்.

31. குழுவின் அங்கத்தவர்களுக்கு ஆளுநரின் அனுமதியுடன் பிரதான அமைச்சரின் மூலம் பரிந்துரைக்கப்படும் கொடுப்பனவு ஒன்று வழங்கப்படலாம். குழுக்களில் அங்கத்துவத்துக்கு முயற்சிகள் வழங்கல்.

III ஆவது பகுதி

**மத்திய மாகாண முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிதியம்**

32. (1) மத்திய மாகாண முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி பிரிவுக்காக மத்திய மாகாண முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிதியம் என அழைக்கப்படும் நிதியம் ஒன்று இருக்க வேண்டிய அதேவேளை கீழே குறிப்பிடப்படும் நிதிகள் அந்நிதியத்தில் வைப்பிட வேண்டும். முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிதியம்.

(அ) பிரிவுக்காக மாகாண சபையால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் எல்லா நிதிகளும் ;

(ஆ) பிரிவுக்காக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் நிதிகள் ;

(இ) பிரிவினால் தமது பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் சேகரிக்கப்படும் நிதிகள் ;

(ஈ) ஏனைய உதவிகள் மற்றும் அன்பளிப்புகள்.

(2) பிரிவின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நிதி முகாமைத்துவ சபையால் தீர்மானிக்கப்படும் முறையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

(3) ஒவ்வொரு நிதியாண்டிற்காகவும் வருமானம், செலவு மற்றும் ஏனைய அனைத்து கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கியதாக வருடாந்த நிதிக்கூற்று ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.

33. பிரிவின் நிதியாண்டு சனவரி 01 தொடக்கம் திசெம்பர் 31 வரையான காலப்பகுதியாக இருக்க வேண்டும். நிதியத்தின் நிதியாண்டு.

34. கணக்காய்வாளர் நாயகத்தால் ஒவ்வொரு வருடமும் மாகாணப் பிரிவில் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். நிதியத்தின் கணக்காய்வு.

IV ஆவது பகுதி

**மத்திய நிலையங்களை பதிவு செய்தல்**

35. இந்த நியதிச் சட்டம் அமுலாக்கப்பட்ட திகதியிலிருந்து மற்றும் அதன் பின்னர் இந்நோக்கத்திற்காக இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு கீழ் பதிவு செய்யப்படாத மாகாணத்திற்குள் எந்தவொரு மத்திய நிலையமும் நடாத்தி செல்லப்படக் கூடாது. மத்திய நிலையங்களை பதிவு செய்தல்.

36. (1) இந்த நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாள் தொடக்கம் மாகாணத்தில் செயற்படும் அனைத்து முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி மத்திய நிலையங்களும் பிரிவின் கீழ் பதிவுச் சான்றிதழை பெற்றுக்கொள்ள வேண்டும். தற்போது செயற்படும் மத்திய நிலையங்களை பதிவு செய்தல்.

(2) இந்த நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளில் இருந்து மூன்று மாதத்திற்குள் நடாத்திச் செல்லப்படும் அனைத்து மத்திய நிலையத்தினதும் உரிமையாளர் அல்லது முகாமையாளர் அல்லது நிர்வாகி அம் மத்திய நிலையங்களை பதிவு செய்யும்படி பணிப்பாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(3) (2) உப பிரிவின்படி விண்ணப்பிக்க தவறும் குறித்த உரிமையாளர் அல்லது முகாமையாளர் அல்லது நிர்வாகி நியாயமான மற்றும் ஒரே முறையில் பார்க்கும் போது தீர்மானிக்க முடியுமானதுமான காரணத்துடன் வேண்டுகோள் விடுக்கும்பட்சத்தில் கடந்த காலத்தை கருத்தில் கொண்டு பணிப்பாளரால் ஒரு கட்டணம் அறவிடப்பட்டு பதிவு செய்ய முடியும்.

(4) மேலே (2) அல்லது (3) பிரிவுகளின் கீழ் பதிவு செய்வதற்காக விண்ணப்பம் செய்யும் முன் பிள்ளை அபிவிருத்தி மத்திய நிலையமொன்றுக்கு இருக்க வேண்டிய மனித மற்றும் பௌதீக வளங்களின் நியமங்கள் முறையாக இல்லாவிடின் அவ்வாறான நிறுவனத்திற்கு குறித்த நியமங்களை பூரணப்படுத்திக்கொள்ள 3 வருட நிவாரண காலம் ஒன்று மற்றும் தற்காலிக பதிவொன்றும் வழங்கப்படலாம்.

புதிதாக ஆரம்பிக்கப்படும் மத்திய நிலையங்களை பதிவு செய்தல்.

37. இந்த நியதிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் தினத்திலிருந்து புதிதாக ஆரம்பிக்கப்படும் மத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட முன்னர் பணிப்பாளருக்கு விண்ணப்பித்து பதிவு செய்துக்கொள்ள வேண்டும்.

பயிற்சி நெறிகளை நடாத்தும் நிருவனங்களை பதிவு செய்தல்.

38. முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி கற்கை நெறிகள் அல்லது பயிற்சி நெறிகளை நடாத்தி மாகாணத்தில் செயற்படும் தனியார் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் அதற்காக பிரிவில் பதிவு செய்ய வேண்டும்.

பதிவுக் கட்டணம்.

39. (1) பதிவு செய்வதற்காக விண்ணப்பதாரி பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும் பதிவுக் கட்டணத்தை செலுத்த வேண்டும்.

(2) பதிவு செய்வதற்கான தகுதிகள், பதிவுக் கட்டணம் மற்றும் ஏனைய ஏற்பாடுகள் அமைச்சரினால் ஒழுங்கு விதிகள் மூலம் தீர்மானிக்கப்படும்.

(3) பதிவு செய்யும் காலத்தை நீடிப்பதற்கும், பதிவு தாமதமாகும் காலப்பகுதிக்கு மேலதிகக் கட்டணம் ஒன்றை அல்லது தண்டப் பணம் ஒன்றை அறவிடவும் பிரிவுக்கு அதிகாரம் உண்டு.

பதிவுச் சான்றிதழை வெளியிடல்.

40. (1) மத்திய நிலையம் ஒன்றை பதிவு செய்வதற்காக விண்ணப்பம் ஒன்றை முன்வைத்துள்ள சந்தர்ப்பத்தில் அந்த மத்திய நிலையத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என பணிப்பாளர் திருப்தி அடைவாராயின் பதிவுச் சான்றிதழை வெளியிட வேண்டிய அதேவேளை பதிவுக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என பணிப்பாளர் தீர்மானிப்பாராயின் காரணம் தெரிவித்து விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டும்.

(2) (அ) பதிவு செய்வதற்கான தகைமைகளை ஏதேனும் ஒரு மத்திய நிலையம் பூர்த்தி செய்யாத சந்தர்ப்பத்தில், அந்த தகைமைகளை 3 வருட காலத்திற்குள் பூர்த்தி செய்ய வேண்டும் என நிபந்தனை ஒன்றை உள்ளடக்கியதாக தற்காலிக பதிவுச்சான்றிதழ் ஒன்று வழங்கப்படும் ;

(ஆ) மூன்று வருட இறுதியில் பதிவுத் தகைமைகள் மேலும் பூர்த்தி செய்யப்படவில்லை என பணிப்பாளருக்கு தெரிய வந்தால் தற்காலிகமாக வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழை இரத்துச் செய்யும் அதிகாரம் பணிப்பாளருக்கு உண்டு.

நிராகரிக்கப்பட்ட விண்ணப்பம் தொடர்பான மேன் முறையீடு.

41. (1) நிராகரிக்கப்பட்ட விண்ணப்பம் தொடர்பில் நிராகரிப்பை அறிவிப்பு செய்த தினத்தில் இருந்து 30 நாட்களுக்குள் செயலாளருக்கு மேன் முறையீடு செய்யலாம்.

(2) அவ்வாறான மேன் முறையீடுகள் கிடைக்கும் போது செயலாளர் முகாமைத்துவக் குழுவிற்கு அதனைச் செலுத்தி அதன் அவதானிப்புகள் மற்றும் புரிந்துரைகளை பெற்று அந்த மேல் முறையீடு தொடர்பில் தமது அவதானிப்புகளை தெரிவித்து பிரதான செயலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(3) செயலாளரினால் சமர்ப்பிக்கப்படும் மேன் முறையீடுகள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பிரதான செயலாளருக்கு இருப்பதுடன் பிரதான செயலாளரால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியும் முடிவானதுமாகும்.

பதிவு செய்யப்படாத மத்திய நிலையங்களை நடாத்திச் செல்லல.

42. இந்நியதிச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீறி பதிவு செய்யப்படாத மத்திய நிலையங்களை நடாத்திச் செல்லும் தனிநபர் அல்லது நபர்களை உள்ளடக்கிய குழு இந்த நியதிச்சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்தவராக கருதப்படுவர்.

*43.* (1) பிரிவினால் பதிவு செய்யப்படும் ஒவ்வொரு மத்திய நிலையத்திற்கும் இலக்கம் ஒன்றுடன் பதிவுச் சான்றிதழ் வெளியிடப்படுவதுடன் அச்சான்றிதழ் மத்திய நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். *பதிவுச் சான்றிதழை காட்சிப்படுத்தல்.*

(2) பிரிவினால் பதிவு செய்யப்படும் மத்திய நிலையங்கள் தொடர்பில் ஒரு கோப்பு பராமரிக்கப்பட வேண்டும்.

(3) பிரிவினால் வெளியிடப்படும் பதிவுச் சான்றிதழ் வேறு ஒரு நபருக்கு பிரிவின் முன் அனுமதியின்றி கையளிக்க முடியாத அதேவேளை அவ்வாறு கையளிக்கப்படும் பதிவுகள் நிராகரிக்கப்பட்டதும் செல்லுபடியற்றதுமாகும்.

(4) பதிவுச்சான்றிதழ் ஒன்றை முறையாக கையளிப்பது தொடர்பான ஏற்பாடுகள் அமைச்சரினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகள் ஊடாகவேயாகும்.

*44.* குறித்த ஒரு மத்திய நிலையத்துக்கு பதிவுச் சான்றிதழ் வெளியிடப்பட்டாலும் பின்வரும் சந்தர்ப்பங்களில் அதாவது, *இரத்துச் செய்வதற்கான சந்தர்ப்பங்கள்.*

(1) பதிவு செய்வதற்கான அடிப்படைத் தேவைகளில் ஒன்று அல்லது சில மீறப்படல்.

(2) மத்திய நிலையமொன்றின் உரிமை மாற்றப்படும் சந்தர்ப்பத்தில் அதனை பிரிவிற்கு தெரியப்படுத்தி முறையான பதிவுத் திருத்தம் ஒன்றை மேற்கொள்ளாமை ஆகிய சந்தர்ப்பங்களில் அதன் பதிவுச் சான்றிதழ் முகாமைத்துவக் குழுவின் தீர்மானத்தின்படி இரத்துச் செய்யும் அதிகாரம் பணிப்பாளருக்கு உண்டு.

## V ஆவது பகுதி

## பொது ஏற்பாடுகள்

*45.* (1) அமைச்சரினால் முகாமைத்துவ சபையின் ஆலோசனைகள் வினவப்பட்டு மத்திய நிலையங்களை பதிவு செய்தல், மத்திய நிலையங்களில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச நியமங்களை விதிப்பது மற்றும் இந்த நியதிச் சட்டத்தின் பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான ஏனைய ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் தயாரிக்கப்படலாம். *நியமங்கள் மற்றும் நிபந்தனைகள்.*

(2) அமைச்சரினால் தயாரிக்கப்படும் ஒவ்வொரு ஒழுங்குவிதியும் அல்லது கட்டளையும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து அல்லது அந்த கட்டளையில் குறிப்பாக குறிப்பிட முடியுமான ஏதேனும் பிற்பட்ட தினத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

(3) அமைச்சரினால் தயாரிக்கப்படும் ஒவ்வொரு ஒழுங்குவிதியும் அல்லது கட்டளையும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்னர் இயன்ற விரைவில் அனுமதிக்காக மாகாண சபைக்கு முன்வைக்கப்பட வேண்டும். மாகாண சபையால் அனுமதி வழங்கப்படாத ஒரு கட்டளை அல்லது ஒரு ஒழுங்குவிதி சம்மதிக்கப்பட்ட தினத்திலிருந்து அந்த ஒழுங்குவிதிக்கு அல்லது கட்டளைக்கு கீழ் முன்னர் செய்யப்பட்ட நடவடிக்கைக்கு பாதகம் ஏற்படா வண்ணம் தளர்த்தப்பட வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அல்லது கட்டளை தளர்த்தப்பட வேண்டும் என கருதப்படும் தினம் பற்றிய விபரம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

(5) இந்நியதிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்படும் ஒழுங்குவிதிகள் அல்லது கட்டளைகள் மாகாண சபையில் அங்கீகாரம் பெற்ற பின்னர் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட ஒன்றாக அதிகாரம் பெறும்.

*46.* பிரிவின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் குற்றவியல் சட்டத் தொகுப்பின் வரையறைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு அரசின் சேவையாளர்களாக கருதப்பட வேண்டும். *அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அரச ஊழியர்களாக கருதப்பட வேண்டும்.*

*47.* பிரிவின் இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றாக கருதப்பட வேண்டிய அதேவேளை அச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் செயற்பட வேண்டும். *இலஞ்ச ஊழல் சட்டத்தின் நடவடிக்கைகளுக்கு பிரிவு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளமை.*

குற்றங்களும் அபராதங்களும்.

48. (1) இந்நியதிச்சட்டத்தில் ஏதேனும் பாகம் அல்லது அதன்படி வரையப்பட்ட ஒழுங்குவிதி அல்லது கட்டளை அல்லது ஏதேனும் ஏற்பாடுகள் அல்லது அவ் ஏற்பாட்டை மீறுதல் மற்றும் அந்த ஏற்பாட்டின் அடிப்படையில் செயற்பட அதிகாரம் பெற்ற ஒருவர் கடமையை நிறைவேற்ற இடையூறு செய்தல் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

(2) (1) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றத்தை செய்யும் ஒவ்வொரு நபரும் முறையான நீதிமன்ற அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தில் நடைபெறும் பரிசீலனை வழக்கின் பின் குற்றத்திற்கு குற்றவாளியாவதுடன் அவ்வாறு குற்றவாளியாக்கப்பட்டால் இலங்கையில் அங்கீகாரம் பெற்ற நாணயத்தில் ரூபா பத்தாயிரத்திற்குக் குறையாத அபராதத்திற்கு அல்லது ஆறு மாதத்திற்குக் குறையாத சிறைத் தண்டனைக்கு அல்லது இரண்டிற்கும் கீழ்படிய வேண்டும்.

**பொருள்கோடல்**

சொற்கள் தொடர்பாக இன்னொரு பொருள் தேவைப்படின் மாத்திரம் இந்நியதிச் சட்டத்தில், "மாகாணம்" என்பது மத்திய மாகாணமாகும் ;

"ஆளுநர்" என்பது, மத்திய மாகாணத்தின் ஆளுநரும் ;

"மாகாண சபை" என்பது, மத்திய மாகாணத்தின் மாகாண சபையும் ;

"மத்திய நிலையம்" என்பது, முன் பிள்ளைப் பருவத்தில் உள்ள சிறுவர்களின் திறன் அபிவிருத்தி செய்யும் ஒரு நபர் அல்லது நபர்களைக் கொண்ட குழு, அல்லது அவ்வாறான நிறுவனம் மற்றும் முன் பிள்ளைப் பருவத்தில் உள்ள சிறுவர்களை பராமரிப்பு செய்யும் தின பராமரிப்பு நிலையங்களும் ;

"பணிப்பாளர்" என்பது, இந்நியதிச் சட்டத்தால் பணிப்பாளராக முறையாக நியமிக்கப்பட்ட அதிகாரியும் அவருக்காக செயற்படுவதற்கு முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியும் ;

"மாகாண அரச சேவை" என்பது, 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டம் எனப் பொருள்படும் மாகாண அரச சேவையும் ;

"ஆலோசகர்கள்" என்பது, முன் பிள்ளை அபிவிருத்தி மத்திய நிலையத்தில் திறன் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் தோட்டப் புறத்தை அண்டிய மத்திய நிலையங்களில் சேவையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் ;

"முகாமையாளர்கள்" என்பது, மத்திய நிலையங்களை நடாத்திச் செல்லும் முயற்சியாளர்களும், உரிமையாளர்களும், பராமரிப்பாளர்களும் ;

"விசேட சிறுவர்கள்" என்பது, மத்திய நிலையங்களுக்கு செல்ல வேண்டிய வயதில் இருக்கும் பார்வை குறைபாடுள்ள, செவிப்புலன் குறைபாடுள்ள, உடல் அங்கவீன தன்மை, மந்த மானசீக சிறுவர்கள் போன்ற விசேட சிறுவர்களும் ;

"மத்திய நிலைங்களை நடாத்தி செல்பவர்" என்பது, மத்திய நிலையத்தை நடாத்திச் செல்லும் நபர், முயற்சியாளர், தொண்டர் அமைப்பு அல்லது கூட்டுத்தாபன நிறுவனம் ;

"குறிப்பிட்ட திகதி" என்பது, இந்நியதிச் சட்டம் ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட திகதி எனப் பொருள்படும்.

இந்நியதிச் சட்டத்தில் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கில உரைகளில், ஏதேனும் ஒவ்வாமை ஏற்பட்டால், சிங்கள உரையே செல்லுபடியானதாகும்.

6- 106

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.